**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

FWC

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
# Term Examination, March - 2018

| **தரம் :- 13 (2018)** | **வணிகக்கல்வி** | **புள்ளித்திட்டம்** |
|---|---|---|

## பகுதி I

| | | |
|---|---|---|
| 1) 3 | 11) 4 | 21) 1 |
| 2) 2 | 12) 3 | 22) 4 |
| 3) 4 | 13) 4 | 23) 4 |
| 4) 4 | 14) 5 | 24) 2 |
| 5) 1 | 15) 2 | 25) 3 |
| 6) 3 | 16) 3 | 26) 5 |
| 7) 1 | 17) 1 | 27) 3 |
| 8) 5 | 18) 2 | 28) 2 |
| 9) 4 | 19) 3 | 29) 1 |
| 10) 3 | 20) 2 | 30) 5 |

*(30X2=60 புள்ளிகள்)*

31) அ) கைத்தொழில்துறை (01 புள்ளி)
ஆ) சிறப்புத்தேர்ச்சி (01 புள்ளி)

32) பொருளாதார விலை உறுதிப்பாடு (01 புள்ளி)
மத்திய வங்கி (01 புள்ளி)

33) அ) விசேஷட நிதி நிறுவனம் (01 புள்ளி)
ஆ) ஒப்பந்த சேமிப்பு நிறுவனம் (01 புள்ளி)

agaram.lk

34) அ) ஏற்றுமதியாளன் (01 புள்ளி)
ஆ) நாணயக்கடிதம் (01 புள்ளி)

35) அ) திட்டமிடல் (01 புள்ளி)
ஆ) கட்டுப்படுத்தல் (01 புள்ளி)

36) அ) பாதுகாப்பு இருப்பு (01 புள்ளி)
ஆ) உரிய நேரதந்திரோபாயம் (01 புள்ளி)

37) அ) வங்கிகளுக்கிடையிலான அழைப்புக்கடன் சந்தை (01 புள்ளி)
ஆ) மத்திய வைப்பகமுறை (01 புள்ளி)

38)
- அறிமுகப்படுத்தல் (01 புள்ளி)
- விற்பனைக்கான அறிவித்தல் (01 புள்ளி)
- பங்களிப்புக்கான அறிவித்தல் (01 புள்ளி)

(எவையேனும் இரண்டு விடைக்கு)

39) அ) உற்பத்தி (01 புள்ளி)
ஆ) பௌதீக சூழல் (01 புள்ளி)

40) அ) உள்ளிருந்து ஆட்சேர்த்தல் (01 புள்ளி)
ஆ) ஊழியர் உற்பத்தித்திறன் / வினைதிறன் (01 புள்ளி)

41) 1) நுகர்வோரின் சுவை மாற்றம்
2) மின்சாரம் தடைப்படல்
3) திருடர் பயம்
4) தீப்பிடித்தல் (4X½= 02புள்ளிகள்)
(வேறு பொருத்தமான விடைகள்)

42) 1) இலாபங்களும் பங்கிலாபங்களும்
2) கட்டணங்களும் அறவீடுகளும்
3) வட்டி வருமானங்கள்
4) ஏனையவை (4X½= 02புள்ளிகள்)

43) 1) அங்கத்தவர் எண்ணிக்கை
2) பொறுப்பு
3) மூலதனமிடல்
4) நிர்வாகமும் முகாமைத்துவமும் (4X½= 02புள்ளிகள்)

44) 1) முயற்சியாளர்
2) பிரச்சினைகளை கையாளுபவர்
3) வள ஒதுக்கீட்டாளர்
4) நடுநிலையாளர் (4X½= 02புள்ளிகள்)

45) 1) கணணி உதவியுடனான உற்பத்தி
2) கணணி எண் கட்டுப்பாடு
3) கணணியுடன் ஒருங்கிணைந்த உற்பத்தி
4) கணணி உதவியுடனான வடிவமைப்பு (4X½= 02புள்ளிகள்)

46) 1) சுத்திகரிப்புச்சேவை
2) பராமரிப்புச் சேவை
3) போக்குவரத்துச் சேவை
4) பாதுகாப்புச்சேவை
5) மின்சாரம் நீர்வழங்கல் சேவை (4X½= 02புள்ளிகள்)

agaram.lk

47) 1) மதிப்பிடப்பட்ட கிரயம்
2) போட்டியாளர் விலை
3) சந்தைக்கேள்வி
4) நிறுவன நோக்கம்
5) சந்தைப்படுத்தல் கலவையின் ஏனைய மாறிகள்
6) அரசசட்ட விதிகள் (4X½= 02புள்ளிகள்)

48) 1) நேர்கிரயம் இல்லை
2) பெற்றுக்கொள்ளுதல் இலகு
3) மீளச் செலுத்தத் தேவையில்லை
4) இடர் குறைவு (4X½= 02புள்ளிகள்)

49) 1) பங்குலாபம்
2) மூலதன இலாபம்
3) உரித்து வழங்கல்
4) ஒதுக்கங்களை மூலதனமாக்கல் (4X½= 02புள்ளிகள்)

50) 1) தொழில் உருவாக்கம்
2) தொழில் விளக்கம் / பகுப்பாய்வு
3) மனிதவள திட்டமிடல்
4) ஆட்சேர்ப்பு (4X½= 02புள்ளிகள்)

## பகுதி II

01) 1) அ)

- இலாபத்தை உச்சப்படுத்துதல்
- விற்பனையினை உச்சப்படுத்துதல்
- சந்தைப்பங்கை அதிகரித்தல்
- பங்குகளின் சந்தைப் பெறுமானத்தை உச்சப்படுத்தல்
- வணிகரின் தனிப்பட்ட திருப்தி
- சமூகத்தினதும் மக்களினதும் நலன் (4X½=02புள்ளிகள்)

ஆ)

- வாடிக்கையாளரை திருப்திப்படுத்துதல்
- புத்தாக்கம் செய்தல்
- சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றல்
- வணிக ஒழுக்கத்தினைப் பின்பற்றுதல்
- செலவுச்சிக்கனம் மூலம் குறைந்த விலை நிர்ணயம்
- சவால்கள் / அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் திறன்

(4X½=02புள்ளிகள்)

2) அ)

| பொருட்கள் | சேவைகள் |
|---|---|
| • பௌதீக நிலைப்புத்தன்மை கொண்டது | • பௌதீக நிலைப்புத்தன்மை அற்றது |
| • களஞ்சியப்படுத்த முடியும் | • களஞ்சியப்படுத்த முடியாது |
| • ஓரினத்தன்மை கொண்டதாக இருக்கும் | • வழங்குனர்களுக்கு ஏற்ப வேறுபடும் |
| • வழங்குனரிடமிருந்து பிரிக்க முடியும் | • வழங்குனரிடமிருந்து பிரிக்க முடியாது |

(4X½=02புள்ளிகள்)

agaram.lk

ஆ) சேவையினை வழங்குவதற்கு பொருட்களே அடிப்படையானதாகக் கொள்ளப்படுகின்றது.
உதாரணம் :- வைத்திய சேவைக்கு உபகரணங்களும், மருந்துகளுமே முக்கியம் தேவைப்படுகின்றமை. (01 புள்ளி)

3) அ) உடன்படுகின்றேன். (½ புள்ளி)
அருமையான காணப்படும் **வளங்களைப் பயன்படுத்தி** பொருள்கள், சேவைகள் **உற்பத்தி செய்தல், விநியோகித்தல்** ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் காரணமாக வணிகம் பிரதானமான பொருளாதார கருமமொன்றாக கருதப்படுகின்றது.
(3X½=1½புள்ளிகள்)

ஆ)

- மாற்றமடையும் சிக்கலான தேவைகளை நிறைவுசெய்தல்
- புத்துருவாக்கம்
- தொழில் உருவாக்கம்
- தேசிய பொருளாதார விருத்தி

(4X½=02புள்ளிகள்)

4) நிலம் - கட்டடம் அமைந்துள்ள காணி
கட்டடத்திற்கு கிடைக்கும் காற்றோட்டம்
சூரிய ஒளி

உழைப்பு - உரிமையாளரின் உள உழைப்பு
ஊழியர்களின் உழைப்பு

மூலதனம் - கட்டிடம்
தளபாடங்கள்
ஆடைகள்

முயற்சி - வளங்கள் தொடர்பிலான தீர்மானம்
இடர்களை ஏற்கும் தீர்மானம்
நபர் / நிறுவனம்

(உற்பத்திக்காரணிகளை குறிப்பிட 4X½=02புள்ளிகள்)
உதாரணம் குறிப்பிட 4X½=02புள்ளிகள்

5)

| விநியோகம் | மேம்படுத்தல் |
|---|---|
| • விநியோக மார்க்கங்களின் மூலம் | • விளம்பரங்களின் மூலம் |
| • விற்பனை பிரதேச அளவுகள் மூலம் | • விற்பனை மேம்படுத்தல்கள் மூலம் |
| • போக்குவரத்து முறைகள் மூலம் | • பொதுசன தொடர்புகள் மூலம் |
| • களஞ்சியப்படுத்தல் மூலம் | • நேர்சந்தைப்படுத்தல் மூலம் |
| • இருப்புக்கள் மூலம் | • நிகழ்வுகளும் அனுபவங்களும் மூலம் |
| | • தனிப்பட்ட விற்பனைகள் மூலம் |
| குறிப்பிட 2X½= 01 புள்ளிகள்<br>விளக்க 2X½= 01 புள்ளிகள் | குறிப்பிட 2X½= 01 புள்ளிகள்<br>விளக்க 2X½= 01 புள்ளிகள் |

02)

1) அ)

- சந்தையில் தனியுரிமை நிலை தோன்றுதல்.
- மோசடிகளும் குற்றச் செயல்களும் அதிகரிக்கும்
- சூழல் மிக விரைவாக மாசடையும்
- வணிகங்களில் மக்கள் நலன் புறக்கணிக்கப்பட்டு இலாப நோக்கம் மட்டும் முன்னிலைப்படுத்தப்படும்.
- அருமையான வளங்கள் வினைதிறனற்று பயன்படுத்தப்படும்.
- ஏழை பணக்காரர் என்ற வர்க்க வேறுபாடு தோன்றுதல். (4X½=02புள்ளிகள்)

agaram.lk

ஆ

- உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குபவராக
- கொள்கை வகுப்பாளராக
- கட்டுப்பாட்டாளராக
- ஊக்குவிப்பாளராக
- வரி அறவீட்டாளராக
- வாடிக்கையாளராக
- போட்டியாளராக

(4X½=02புள்ளிகள்)

2) அ) கடன் கொடுத்தோர்
ஆ) முகாமையாளர்
இ) வாடிக்கையாளர்
ஈ) அரசு
உ) பொதுமக்கள் / சமூகம்
ஊ) ஊழியர்கள்
எ) உரிமையாளர்
ஏ) வழங்குனர்

(8X½=04புள்ளிகள்)

3) அ)

- தகவல்களை அறிந்து கொள்வதற்கான உரிமை
- தெரிவு செய்வதற்கான உரிமை

(2X1=02புள்ளிகள்)

ஆ)

- நுகர்வோர் அலுவல்கள் தொடர்பான அதிகாரசபை
- இலங்கை தரக்கட்டளைகள் பணியகம்
- அளவை நிறுவை தரநியமச் சேவைத்திணைக்களம்
- மத்திய சூழல் அதிகாரசபை
- பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியின் காரியாலயம்
- மாவட்ட செயலாளர் அலுவலகம்.

(4X½=02புள்ளிகள்)

4) அ)

- கம்பனிச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட சுயாதீன நிறுவனமொன்றாக இருத்தல்.
- கம்பனியொன்று அதன் அங்கத்தவர்களிலிருந்து வேறுபட்ட சட்டரீதியான அலகொன்றாக இருத்தல்.
- நீண்ட காலம் நிலைத்திருக்கும் தன்மை / வாழ்தன்மை
- உரிமையாளரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டிருத்தல்.
- பங்குகளை வழங்கி மூலதனத்தினை திரட்டிக் கொள்ளல்
- பங்குகளை கைமாற்றம் செய்யலாம்.
- முகாமையானது இயக்குனர் சபையினூடாக மேற்கொள்ளப்படல்.

(4X½=02புள்ளிகள்)

agaram.lk

ஆ)

- சட்டரீதியான தாக்கம் கூடுதலாக காணப்படல்
- ஆரம்பிப்பதற்குச் சிக்கலான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியிருப்பதுடன், அது தொடர்பில் கிரயமொன்றை ஏற்க வேண்டியிருத்தல்.
- பங்குகளின் எண்ணிக்கைக்கேற்ப வாக்களிக்கும் உரிமை காணப்படுவதன் காரணமாக குறைவான பங்குகளைக் கொண்ட பங்காளர்களுக்குக் கூடுதலான அதிகாரம் கிடைப்பதில்லை.
- கம்பனியின் இலாபத்தின் அடிப்படையிலும் பங்காளர்களுக்குக் கிடைக்கும் இலாபத்தின் அடிப்படையிலும் வரி செலுத்த வேண்டியிருப்பதனால் இலாபமானது இரு முறை வரிக்கணிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுகின்றது.
- கலைக்கும் போது விரிவான நடைமுறையொன்றைப் பின்பற்ற வேண்டியிருத்தல்.

(4X½=02புள்ளிகள்)

5) அ)

- அங்கீகார வணிகப்பெயர்
- வியாபாரக் குறியும் பயன்படுத்தும் நடைமுறையும்
- வணிகத்தினை நடாத்திச் செல்லும் சட்டதிட்டங்கள்
- அங்கிகாரம் வழங்குபவரால் வழங்கப்படும் சேவைகள்
- நிதி தொடர்பான நிபந்தனைகள்
- கட்டன விபரங்கள்

(4X½=02புள்ளிகள்)

ஆ)

- அங்கீகாரம் வழங்குபவரின் பிரதிமையும், நன்மதிப்பும்
- தோல்வி / நட்டம் அடைவற்கான சந்தர்ப்பம
- வியாபார குறி பிரசித்தமானதா
- முகாமைத்துவ பயிற்சிகளை வழங்குபவரிடமிருந்து பெற முடியுமா
- நிதி வசதிகளை வழங்குபவரிடமிருந்து பெற முடியுமா
- செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களும், மாதாந்த கட்டணங்களும்.
- மூலப்பொருட் கிடைப்பனவுகள்
- சந்தை வசதிகள்

(4X½=02புள்ளிகள்)

*03)*

*1)* அ)

- சுயமதிப்பீடு
- பயிற்சி
- கல்வி
- அனுபவம்

(குறிப்பிட்டு விளக்க 4X½=02புள்ளிகள்)

ஆ)

| **முயற்சியாளர்** | **வணிகர்** |
|---|---|
| • தனது கருத்து அல்லது புதிய எண்ணக் கருவிற்கமைய வணிகமொன்றை ஆரம்பிப்பார். | • நடைமுறையில் காணப்படும் கருத்து அல்லது எண்ணக்கருவிற்கமைய வணிகமொன்றை ஆரம்பிப்பார். |
| • முயற்சியாளரின் வணிகத்திற்கான போட்டியாளர் அவரேயாவார். | • வணிகத்திற்கு போட்டியாளர்கள் பலர் காணப்படுவார். |
| • புதிய வணிக வாய்ப்புக்கள் தொடர்பில் ஆயத்தமாவார். | • வணிகர் தனது வணிகக் கருமங்கள் தொடர்பிலேயே தொடர்ச்சியாகக் கவனம் செலுத்துவர். |
| • புத்தாக்கம் புனைபவராவார் | • பாரம்பரியத்தைப் பின்பற்றுபவராக இருப்பார் |
| • இடர்களுக்கு முகங்கொடுப்பார் | • பாதுகாப்பான முறையில் கருமங்களை மேற்கொள்ளும். |
| • பிரச்சினைகள் உருவாகும் போது அவற்றிற்குச் சிறப்பாக முகங்கொடுப்பார். | • பிரச்சினைகள் ஏற்படும் போது உற்சாகம் இழப்பர். |

(4X½=02புள்ளிகள்)

*2)* அ)

1. பாரிய வணிகங்களுடன் ஒப்பிடும் போது கூடுதலான வேலை வாய்ப்புக்களை உருவாக்க முடியுமாய் இருத்தல்.
2. தேசிய உற்பத்தியின் அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்த முடியுமாயிருத்தல்.
3. பாரிய அளவு கைத்தொழில்களுக்கு தேவையான மூலப்பொருட்கள், சேவைகளை வழங்குதல்.
4. உள்நாட்டு மற்றும் பிரதேச வளங்களின் உச்சப்பயன்பாடு.
5. மக்களின் வருமான மட்டம் அதிகரித்தல்.
6. பாரிய வணிகங்கள் மேற்கொள்ளாத வணிகக் கருமங்களை மேற்கொள்ளல்.
7. பிரதேச அபிவிருத்தி ஏற்படுவதுடன் நகரமயமாக்கல் காரணமாக ஏற்படுகின்ற பிரச்சினைகள் குறைவடைதல்.

(4X½=02புள்ளிகள்)

agaram.lk

ஆ) நிதிசார் ஊக்குவிப்புக்கள்

- குறுங்கால நீண்டகாலக் கடன்கள்
- நிதி ரீதியான கடன்கள்
- வரிச்சலுகைகள்
- மீள் நிதியிடல் வசதிகள்

(2X½=01புள்ளி)

நிதி ஊக்குவிப்புக்கள்

- ஆலோசனைச் சேவை
- முயற்சியாண்மை அபிவிருத்தி வேலைத்திட்டம்.
- ஆய்வும் தொழிநுட்பச் சேவைகளும்
- உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்
- சந்தை வசதிகளை வழங்கல் / விற்பனை வசதிகள்
- சிறந்த சாதனைகளுக்கான பதக்கங்களை வழங்கல்

(2X½=01புள்ளி)

3) அ)

- காசோலை மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடிதல்.
- நேரடி பெறுவனவுகளைப் பெற்றுக்கொள்ள முடிதல்.
- நிலையான கட்டளையின் அடிப்படையில் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடிதல்.
- மேலதிகபற்று வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடிதல்.
- வங்கியுடன் செய்த கொடுக்கல் வாங்கல் தொடர்பான அறிக்கையினைப் பெற்றுக் கொள்ள முடிதல்.

(4X½=02புள்ளிகள்)

ஆ)

- காசோலையொன்றை எழுதும் போது அழியாத-மை வகையினைப்பயன்படுத்துதல் வேண்டும்.
- அடிக்கட்டையில் உரிய விபரங்களை குறித்துக்கொள்ளுதல் வேண்டும்.
- எழுதும் போது ஏற்படும் தவறுகளை ஒரு தனிக்கோட்டினால் வெட்டி, பிறப்பிப்பவரின் முழுமையான கையொப்பத்தினை அருகே இடுதல் வேண்டும்.
- ஒரே மொழியினையே பயன்படுத்துதல் வேண்டும்.
- பிறப்பிப்பவரின் கையொப்பத்தை உரியவாறு இடவேண்டும்.
- காசோலையில் இடப்படுகின்ற திகதி, அதன் பாதுகாப்புத் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும்.
- வெற்றுக் காசோலையில் கையொப்பம் இடாதிருத்தல் வேண்டும்.

(4X½=02புள்ளிகள்)

4) அ)

- அட்டை உரிமையாளர் - சபீன்
- அட்டை விநியோகிக்கும் நிறுவனம் - இலங்கை வங்கி யாழ்ப்பாணம்
- வியாபாரி / விற்பனையாளர் - கார்கிள்ஸ் பூட்சிற்றி
- கடன் அட்டைச்சங்கம் - விசா

(பூரண விடைக்கு 4X½=02புள்ளிகள்)

agaram.lk

ஆ) அனுகூலம்

- கொடுக்கல் வாங்கலின் போது கிரயம் குறைவடைதல்.
- பணத்தின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல்.
- நாளின் 24 மணி நேரமும் கொடுக்கல் வாங்கலுக்கு பயன்படுத்த முடிதல்.
- கொடுப்பனவுக் கருமங்கள் இலகுவாக அமைதல்.
- பல்வேறு அனுகூலங்கள் கிடைக்கப்பெறுதல்
- வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களுக்கு பயன்படுத்த முடிதல்

(2X½=01புள்ளி)

பிரதிகூலம் :-

- வட்டி, தாமதக்கட்டணம் போன்ற கிரயங்களை ஏற்க வேண்டி இருதத்தல்.
- மோசடி நடவடிக்கைகள் இடம்பெறல்.
- தேவையற்ற நுகர்வு முறைகளுக்குப் பழக்கப்படல்.
- தொழில்நுட்பத்தில் ஏற்படும் தவறுகள் காரணமாக கொடுக்கல் வாங்கல்களில் தடைகள் ஏற்படல்.
- சகல வாடிக்கையாளருக்கும் கொடுக்கல் வாங்கல் செய்வதற்கான ஆற்றலும் பலமும் காணப்படாமை.

(2X½=01புள்ளி)

5) அ)

| ஆயுட் காப்புறுதி | ஏனைய காப்புறுதி |
|---|---|
| • உயிரின் மீதானது | • சொத்துக்கள் மீதானது |
| • இழப்பு நிச்சயம் | • இழப்பு நிச்சயமில்லை |
| • எவ்வளவு தொகைக்கும் காப்புறுதி செய்ய முடிதல். | • சொத்தின் பெறுமதிக்கு மட்டும் காப்புறுதி செய்ய முடிதல் |
| • இழப்பீட்டு தத்துவம் பொருந்தாது | • இழப்பீட்டுத்தத்துவம் பொருந்தும் |
| • சேமிப்பாக கருதப்படும் | • அவ்வாறில்லை |
| • பொதுவாக நீண்டகாலம் | • பொதுவாக குறுங்காலம் |
| • கடன் பெறுமான வசதி உண்டு | • கடன் பெறுமான வசதி இல்லை |
| • மிகையூதியம் உண்டு | • மிகையூதியம் இல்லை |

(4X½=02புள்ளிகள்)

ஆ)

- காப்புறுதி நிறுவனங்களது திரட்டுநிதி பொருளாதாரத்தின் ஏனைய துறைகளில் முதலீடு செய்யப்படுதல்.
- காப்புறுதியின் மூலம் பெருமளவானவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்தல்.
- அபாயங்கள் ஈடுசெய்யப்படுவுதனால் தயக்கமின்றி வணிகக்கருமங்களில் ஈடுபடமுடிதல்.
- பல்வேறு காப்புறுதி திட்டங்களினால் வியாபாரங்கள் மிகவேகமாக வளர்ச்சியுறுதல்.

(4X½=02புள்ளிகள்)

04)

1) அ)

- மூலப்பொருட்களை உரிய நேரங்களுக்கு பெற்றுக்கொள்ள முடிதல்.
- முடிவுப்பொருட்களை உரிய நேரத்திற்கு சந்தைகளுக்கு நகர்த்த முடிதல்.
- ஊழியர்களை குறிப்பிட்ட நேரத்திற்கு அழைத்துக் கொள்ள முடிதல்.
- வணிகத் தொடர்புகளைப் பேண முடிதல்.
- சந்தையை விரிவுபடுத்துவதற்கு

(4X½=02புள்ளிகள்)

agaram.lk

ஆ)

- சுரங்க வழி போக்குவரத்து
- மேம்பாலங்களை அமைத்தல்
- அதிவேக பெருந்தெரு போக்குவரத்து
- மின்சார மோட்டார் வண்டிகளை பயன்படுத்துதல்.
- சூழலுக்கு தீங்கிழைக்காத வலு வகைகளை பயன்படுத்துதல்.
- தான் இருக்குமிடத்திற்கு வாகனங்களை வரச்செய்தல்

(4X½=02புள்ளிகள்)

2) அ)

- கூட்டங்கள் எல்லா பிரச்சினைகளையும் கலந்துரையாடி தீர்க்கக்கூடியன.
- தொடர்புபடுவோருக்கு இடையிலான காலதாமதங்கள் குறைக்கப்படுகின்றன.
- புரிந்துணர்வுகளை வளர்க்கின்றது.
- கூட்டுத்தீர்மானங்களுக்கு எல்லோரையும் பிரச்சினைகள் இன்றி இணைக்கின்றன.

(4X½=02புள்ளிகள்)

ஆ)

- சரியான நிகழ்ச்சி நிரல் இன்மை
- கூட்டங்களில் கலந்து கொள்வோர் தாமதமாக வருகைதரல்
- பொருத்தமற்றவர்களை கூட்டத்திற்கு அழைத்தல்
- தெளிவான இறுதியான தீர்மானம் மேற்கொள்ள முடியாமை.
- நீண்ட நேரம் கூட்டத்தினை நடாத்துதல்.
- கூட்டங்களில் கலந்து கொள்வோர் போதிய ஆயத்தமின்றி கூட்டங்களில் கலந்து கொள்ளல். இதனால் போதிய பங்களிப்பினை வழங்க முடியாது.

(4X½=02புள்ளிகள்)

agaram.lk

3) அ)

- பொருட்களை தரம்பிரித்து பொதிகட்டி விற்பனை செய்வதன் மூலம் நுகர்வோருக்கு வசதியினை ஏற்படுத்துதல்.
- சந்தைக்கேள்விக்கேற்ப பொருட்களை சீராக நிரம்பல் செய்தல்.
- சீரான விநியோகம் மூலம் விலைகளை உறுதிபட பேண முடிதல்.
- பொருட்களது உத்தரவாதங்களினை நுகர்வோருக்கு நிறைவேற்றிக் கொடுத்தல்.

(4X½=02புள்ளிகள்)

ஆ)

1) கப்பல் குத்தகைப்பத்திரம்

ஏற்றுமதியாளன் ஒருவன் பொருட்களை அனுப்ப வசதியாக கப்பலை குத்தகைக்குப் பெறுவது சம்பந்தமாக கப்பல் கம்பனியுடன் ஏற்படுத்தப்படும் ஒப்பந்தமே இதுவாகும்.

(01 புள்ளி)

2) கப்பல் தளப்பத்திரம்

துறைமுக மேடையில் சுங்கத்தீர்வைக்காக ஏற்றுமதியாளனது பொருட்கள் சுங்கத்திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட்டு ஏற்றுமதியாளனுக்கு வழங்கப்படும் ஆவணமே இதுவாகும்.

(01 புள்ளி)

4) அ)

- அனைத்து பொருட்களையும் ஒரே இடத்தில் கொள்வனவு செய்ய முடிதல்.
- சுயமாகத் தெரிவு செய்யும் சந்தர்ப்பம்
- பொருட்களில் விலை குறிப்பக்கட்டிருப்பதனால் மோசடி இடம் பெற வாய்ப்புக்கள் இல்லை
- தரமான பொருட்களும் சேவைகளும் காணப்படுதல்
- நுகர்வோருக்கு வேறுபட்ட வசதிகள் மேற்கொள்ளப்படல்
  உ+ம் :- வாகனத்தரிப்பிட வசதி
  சிற்றுண்டிச்சாலை
  சிறுவர் மகழ்விடம்
- இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல்
- குளிரூட்டப்பட்டிருத்தல்.

(4X½=02புள்ளிகள்)

ஆ)

- ஊழியர்களை கண்காணிக்க முடிதல்
- வாடிக்கையாளரது செயற்பாடுகளை கண்காணிக்க முடிதல்
- பாதுகாப்புப் பணிகள் இலகுபடுத்தப்படும்
- பணப்பரிமாற்றங்களின் போதான சிக்கல்களை மீள பரிசீலிக்க முடிதல்
- உரிமையாளரால் வீட்டிலிருந்தவாறே வணிக செயற்பாட்டினை கண்காணிக்க முடிதல்.

(4X½=02புள்ளிகள்)

5) அ)

- வட அமெரிக்க சுதந்திர வியாபார ஒப்பந்தம் (NAFTA)
- தெற்காசிய சுதந்திர வியாபார வலயம் (SAFTA)
- ஆசிய பசுபிக் வியாபார ஒப்பந்தம் (APTA)

(2X1=02புள்ளிகள்)

agaram.lk

ஆ)

- சுதந்திரமான வியாபாரத்திற்கு எதிராகச் சுங்கவரி மற்றும் சுங்கவரி அல்லாத தடைகள் நீங்குதல்
- நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு மேம்படல்
- தமது உற்பத்திகளுக்கு நிலையான சந்தையொன்று கிடைத்தல்
- நிலையான விலை கிடைப்பதனால் விலை ஏற்ற இறக்கங்களினால் ஏற்படக்கூடிய பிரதி கூலங்கள் குறைவடைதல்
- அங்கத்துவ நாடுகள் சகலவற்றிற்கும் சமமான உரிமைகள் கிடைக்கப்பெறல்
- பூகோள ரீதியான நிதி ஒத்துழைப்பு அதிகரித்தலும், நிதி உறுதித்தன்மையினை உறுதிப்படுத்தலும்.
- வேலை வாய்ப்புக்கள் விரிவடைதலும் வளமான பொருளாதார அபிவிருத்தியும் வறுமை குறைவடைதலும்.

(4X½=02புள்ளிகள்)

05)

1) அ) வணிகமொன்றின் எந்தவொரு நடவடிக்கையினதும் வெற்றிக்கு முறையானதிட்டமிடல் அவசியமானதாகும். திட்டமிடல் முறையாக மேற்கொள்ளாதவிடத்து வணிக நடவடிக்கைகளை கொண்டு நடாத்த முடியாது போவதுடன் அது சரியாக நடைபெறுகின்றதா என்பதனை உறுதி செய்யும் கட்டுப்படுத்தல் கருமமும் தொழிற்பட முடியாது போகும். ஆதலால் திட்டமிடலும், கட்டுப்படுத்தலும் ஒன்றுடனொன்று தொடர்புடையதாகும்.

(02 புள்ளிகள்)

ஆ)

- உற்பத்திகளின் தரத்தினைப் பாதுகாத்துக் கொள்வதற்கு
- கிரயங்களை இழிவுபடுத்திக் கொள்வதற்கு
- தவறுகளை பூச்சியமட்டத்திற்கு கொண்டுவருவதற்கு
- சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு செம்மைப்படுத்துவதற்கு
- நிறுவனத்தின் செயற்பாட்டுத்திறன் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திற்கேற்ப இடம்பெறுகின்றது என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு.

(4X½=02புள்ளிகள்)

**2) அ) அறிவு :-**

முகாமையாளர் ஒருவர் தன்னைப்பற்றியும் சூழல் தொடர்பாகவும் அறிந்துள்ள அளவும் தகவல்களும் அறிவு என்பதாகும்.

**திறன் :-**

குறிப்பிட்ட ஒரு விடயத்தில் கொண்டுள்ள சிறப்பாற்றல் திறன் எனப்படும்.

**நேர்மனப்பாங்கு :-**

பல்வேறு விடயங்கள் தொடர்பிலான மிக நம்பிக்கையுடன் கூடிய உளநிலை நேர்மனப்பாங்கு ஆகும்.

(ஏதாவது 2 ற்கு X 1=2 புள்ளிகள்)

ஆ)

- குறித்த பணி தொடர்பான அறிவு
- தான் சொல்வதனை ஏற்கவைக்கும் திறன் / தன்வயப்படுத்தல்
- பிரச்சினை தொடர்பான பகுப்பாய்வுத்திறன்
- கூட்டாக இயங்கும் திறன்
- பேரம் பேசும் திறன்
- தெளிவாக கருத்தை வலியுறுத்தும் ஆற்றல்
- ஆரம்பித்து வைக்கும் திறன்
- தனிப்பட்ட ஆளுமை

(4X½=02புள்ளிகள்)

3) அ)

- இலக்கு, நோக்கத்துடன் இணைந்து காணப்படுதல்
- நடைமுறைக்கு பொருந்தக்கூடியதாக காணப்படல்
- பல்வேறு அக்கறையுடைய தரப்பினரால் ஏற்றுக் கொள்ளப்படல்
- நெகிழ்தன்மை உடையதாக இருத்தல்.
- சாத்தியப்பாட்டுத்தன்மை
- சமூகம் மற்றும் நிதி தொடர்பிலான இலாபகரத்தன்மை
- காலவரையறை

(4X½=02புள்ளிகள்)

ஆ)

- எடுக்கப்படும் தீர்மானங்களினால் தவறு ஏற்படும் சந்தர்ப்பம் அதிகமாக தென்படல்
- தீர்மானத்தின் தாக்கம் மிக நீண்ட காலம் நிலைத்திருத்தல்
- தீர்மானத்தினை நடைமுறைப்படுத்தும் செலவு உயர்வாக இருத்தல்.
- எல்லோரினையும் கட்டுப்பட வைக்கும் தீர்மானம் ஒன்றாக இருத்தல்.

(4X½=02புள்ளிகள்)

agaram.lk

4) அ)

- நியமங்களை உருவாக்குதல்
- உண்மையான பெறுபேறுகளை மதிப்பிடல்
- பெறுபேறுகளை நியமங்களுடன் ஒப்பிடல்
- விலகல் இருப்பின் சீராக்குதல்

(4X½=02புள்ளிகள்)

ஆ)

- நிறுவன செயற்பாட்டுத்திறன் எதிர்பார்த்த மட்டத்திற்கு இடம் பெறுகின்றதா என உறுதிப்படுத்த
- வளவிரயங்களையும், கிரயங்களையும் இழிவுபடுத்துவதற்கு
- ஊழியர்களும் முகாமையும் விடும் தவறுகளை இழிவு படுத்துவதற்கு.
- நிறுவன உற்பத்தித்தரத்தினை உயர்த்திச் செல்வதற்கு
- சூழல் மாற்றங்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுப்பதற்கு
- ஏனைய அனைத்து முகாமைத்துவ கருமங்களதும் வெற்றியினை உறுதிப்படுத்துவதற்கு

5) அ)

- இயந்திரங்களுக்கு குறிப்பிட்ட காலத்திற்கொரு தடவை நிறுத்தி உராய்வு நீக்கி இட்டு சீர்செய்தல்.
- உற்பத்தி மூலப்பொருட்களை பரிசோதித்து உற்பத்திக்கு அனுப்புதல்.
- தொழிலாளருக்கு பயிற்சியளித்த பின் உற்பத்தியில் ஈடுபடுத்துதல்.

(2X1=02புள்ளிகள்)

ஆ)

- இயந்திரங்கள் பழுதுபட்டதன் பின்னர் நிறுத்தி பழுது பார்த்தல்.
- இறுதி உற்பத்திகளை பரிசீலனை செய்தல்.
- மூலப்பொருட்களை பரிசீலனையின் பின் மாற்றியமைத்தல்.
- தொழிலாளரை பணியில் அமர்த்தியபின் பயிற்சியளித்தல்

(2X1=02புள்ளிகள்)

agaram.lk

06)

1) அ)

- உற்பத்தி திட்டமிடல்
  உ+ம் :- உற்பத்தி முறைகள், எதிர்கால கேள்வி
- உற்பத்திப் பொறியியல்
  உ+ம் :- உற்பத்தி நேரம், இயந்திர இயலளவு
- உற்பத்திக்கட்டுப்பாடு
  உ+ம் :- சரக்கிருப்பு கட்டுப்பாடு, தரக்கட்டுப்பாடு
- பொருள் கொள்வனவு
  உ+ம் :- உற்பத்திக்கான பொருட்கள், உற்பத்திக்கான சேவைகள்
- ஆராய்ச்சியும், அபிவிருத்தியும்
  உ+ம் :- புதிய பொருள் அறிமுகம், தரத்தினை உயர்த்துதல்.

(4 விடயங்களை குறிப்பிட 01 புள்ளி)
4 விடயங்களுக்கு உதாரணம் குறிப்பிட 01 புள்ளி

ஆ)

- உற்பத்திக்கிரயங்கள் அதிகமாயினும் தரத்தில் மிகச்சிறந்தவையாக இருத்தல்.
- கேள்வியாளரின் தேவைகளும், விருப்பங்களும் விஷேடமாக கருத்தில் கொள்ளப்படும்.
- கட்டளை உற்பத்தியுடன் ஒப்பிடுமிடத்து விலை சற்றுக்குறைவாக இருத்தல்.
- பாய்ச்சல் உற்பத்தியுடன் ஒப்பிடுமிடத்து இவற்றில் ஒரு தனித்தவத்தினை காணமுடியும்
- சந்தை நட்ட அச்சம் இல்லாதிருத்தல். (4X½=02புள்ளிகள்)

2) அ)

- மூலப்பொருள் பெறுவனவு, பொறி இயந்திரச் செயற்பாடுகள், பயன்படுத்தும் ஊழியவளம் யாவற்றிலும் தரங்களை முற்கூட்டியே உறுதிப்படுத்துதல்.
- உற்பத்திச் செயற்பாட்டின் ஒவ்வொரு படிமுறைகளையும் பரிசீலனை செய்தல்.
- முடிவுப் பொருட்களைப் பரிசீலனை செய்தல்.

ஆகியபடிகள் யாவற்றிலும் தரத்தினைப் பேணுவதே முழு மொத்த நோக்கம் என்பதாகும்.

(02 புள்ளிகள்)

ஆ)

- தர அதிகரிப்பின் காரணமாக வாடிக்கையாளர்களினால் ஏற்றுக்கொள்ளும் தன்மை அதிகரித்து கேள்வி அதிகரித்தல்.
- கேள்வி அதிகரிப்புக்குக் காரணமாக விற்பனை, இலாப அளவுகள் அதிகரித்தல்.
- வீண் விரயங்கள் குறைவடைதல்
- கிரயங்கள் குறைவடையும்
- வாடிக்கையாளரது முறைப்பாடுகள் குறைவடைதல்.
- போட்டிகளுக்கு இலகுவில் முகம்கொடுக்க முடிதல்
- சட்ட நிலைமைகளுக்கு உட்பட்டுச் செயற்பட முடிதல்
- உற்பத்தி தொடர்பில் சாதகமான பின்னூட்டல்களைப் பெற முடிதல்.

(4X½=02புள்ளிகள்)

3) அ) தர நியமம்
ஆ) புள்ளி விபரச் செயன் முறைக்கட்டுப்பாடு
இ) தரவட்டம்
ஈ) தர உறுதி

(4X1=04புள்ளிகள்)

4) அ)

| | |
|---|---|
| நிலையான கிரயம் | 40,000 |
| மாறும் கிரயம் (10,000x20) | 200,000 |
| மொத்தக்கிரயம் | 240,000 |

agaram.lk

அலகுக்கிரயம் = $\frac{\text{மொத்தக்கிரயம்}}{\text{விற்பனை அலகுகள்}}$

$= \frac{240,000}{10,000}$

= 24 ரூபா

கிரயம் + இலாபம் = விற்பனைவிலை
80% + 20% = 100%

$\therefore \frac{24}{80} \times 100$

அலகு விற்பனை விலை = 30 ரூபா

(02 புள்ளிகள்)

ஆ)

- பங்களிப்பு = விற்பனை விலை – அலகு மாறும் கிரயம்
  = 30 – 20
  = 10 ரூபா

இலாபநட்டமற்ற புள்ளி = $\dfrac{\text{மொத்த நிலையான கிரயம்}}{\text{அலகுக்கான பங்களிப்பு}}$

$= \dfrac{40,000}{10}$

= *4000* அலகுகள் (*02* புள்ளிகள்)

*5)* அ)

- நாம் செலவிடுகின்ற பணத்திற்கு உச்ச திருப்தியைப் பெற்றுக் கொள்வதுடன் கொள்வனவும் இலகுவாதல்.
- சந்தை தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதனூடே நுகர்வு தொடர்பான விளக்கங்களைப் பெறுவதற்கு.
- சந்தையில் தட்டுப்பாடின்றி பொருட்களும் சேவைகளும் கிடைக்க வகை செய்தல்.
- வழங்கப்படுகின்ற உத்தரவாதங்களினூடே தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு.
- பல்வேறு பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக் கொள்வதற்கு.

(4X½=02புள்ளிகள்)

ஆ) தேவைகளும் விருப்பங்களும்
கேள்வி
உற்பத்திப் பொருள்
பெறுமதி
திருப்தி
தரம்
பரிமாற்று
கொடுக்கல் வாங்கல்
தொடர்பு
சந்தை

agaram.lk

(வரிசைக்கிரமமாக குறிப்பிட்டிருந்தால் மட்டுமே *02* புள்ளி)

*07)*

*1)* அ) புவியியல் காரணிகள்
சமூகவியல் / மக்கட் சூழல் காரணிகள்
உளவியல் காரணிகள்
நடத்தை காரணிகள்

(பொருத்தமான உதாரணங்களைக் கருத்திற்கொள்க)
4X½=02புள்ளிகள்)

ஆ)

- அனைத்துச் சந்தைகளும் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்படுவதனால் சந்தை தொடர்பான சிறந்த விளக்கத்தைப் பெற முடிதல்.
- பொருத்தமான நிகழ்காலச் சந்தைச் சந்தர்ப்பங்களை இனம் காண முடியுமாயிருத்தல்.
- துண்டமாக்கப்பட்ட சந்தையினை இன்னும் சிறப்பாக துண்டமாக்க முடியுமாயிருத்தல்.
- நிறுவனத்திடமுள்ள வரையறுக்கப்பட்டுள்ள வளங்களை வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்த முடிதல்.
- நிறுவனத்திற்குச் சந்தை தொடர்பாக எழுகின்ற நட்ட அச்சத்தினைக் குறைத்துக் கொள்ள முடிதல்.
- சந்தைப்படுத்தல் வேலைத்திட்டத்தை மிகவும் சிறப்பாக மேற்கொள்ள முடிதல்.

(4X½=02புள்ளிகள்)

2) அ) உற்பத்திப்பொருள்

- பல்வகையான உற்பத்திகள்
- பண்டக்குறி / வியாபாரக்குறி
- உற்பத்திப் பொருளின் தரம்
- பொதிகட்டல்
- உத்தரவாதம்

விலை

- பட்டியல் விலை
- கழிவு விலை
- கொடுப்பனவு முறை
- கொடுப்பனவு நிபந்தனைகள்
- கொடுப்பனவுக் காலம்.

இடம் / விநியோகம்

- விநியோக மார்க்கம்
- விற்பனைப் பிரதேச அளவு
- போக்குவரத்து முறை
- களஞ்சியப்படுத்தல்
- இருப்புக்கள்

மேம்படுத்தல்

- விளம்பரம்
- விற்பனை மேம்படுத்தல்
- பொதுசனத் தொடர்பு
- நேர் சந்தைப்படுத்தல்
- நிகழ்வுகளும் அனுபவங்களும்
- தனிப்பட்ட விற்பனை

(4X½=02புள்ளிகள்)

ஆ) அனைத்துச் சந்தையினுள் உள்ள பல்வேறுபட்ட பண்புகளைக் கொண்ட வாடிக்கையாளரிடையே ஒரே மாதிரியான (சமமான) பண்புகளைக் கொண்ட வாடிக்கையாளர்களை இனம் கண்டு அவர்களிலும் நிறுவனத்திற்கு மிகவும் கவர்ச்சியாகவும் இலாபத்தன்மையுடனும் சேவை செய்யக்கூடிய சந்தையின் பகுதி.

(02 புள்ளிகள்)

3) அ) பொருள் அல்லது சேவையினை சந்தைப்படுத்துவதற்கான தகவல்களை முறையாக சேகரித்தல், அறிக்கைப்படுத்தல், பகுப்பாய்வு செய்தல், முடிவுகளாக சமர்ப்பித்தல் ஆகிய ஒழுங்கு முறையான செயற்பாடுகளே சந்தைப்படுத்தல் ஆராய்ச்சி எனப்படும்.

(02 புள்ளிகள்)

ஆ) முதலாந்தரத் தரவு / ஆரம்பத் தரவு

- நேர்முக உரையாடல்
- வினாக்கொத்து
- அவதானிப்பு

(2X½=01புள்ளி)

agaram.lk

இரண்டாம் தரத்தரவு / துணை நிலைத்தரவு

- மத்திய வங்கி அறிக்கை
- வணிக வங்கி அறிக்கை
- பத்திரிகைத் தகவல்கள்

(2X½=01புள்ளி)

4) அ)

- உற்பத்திப் பொருளுக்குப் பாதுகாப்பு கிடைக்கப்பெறுதல்
- உற்பத்திப் பொருட்களை இலகுவில் இனங்காண முடிதல
- உற்பத்திப் பொருள் தொடர்பான தகவல்களை வழங்க முடிதல்.
- மேம்படுத்தல் கருவியொன்றாகப் பயன்படுத்த முடிதல்.
- உற்பத்திப் பொருளுக்குக் கவர்ச்சி கரமான தன்மை ஒன்றைப் பெற்றுக் கொடுத்தல்.
- களஞ்சியப்படுத்தல், மேம்படுத்தல், போக்குவரத்து என்பவற்றிற்கு இலகுவாகக் காணப்படும்.
- பொருளுக்குப் பெறுமதியினைச் சேர்த்தல்.
- வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தல்.

(4X½=02புள்ளிகள்)

ஆ)

- உற்பத்திப் பொருளின் தன்மை.
- பொதியிடல் மூலம் உற்பத்திப்பொருளுக்கு கிடைக்கப்பெறுகின்ற பயன்கள்.
- தொழில்நுட்பப் பொருத்தப்பாடு.
- பொதியிடலின் பாகங்கள் (நீளம், அகலம், உருவ அமைப்பு, நிறை போன்றன)
- நிறங்களும் வாசிப்பதற்கு இலகு தன்மையும்.
- நுகர்வோர் இனங்காண்பதற்கு இலகு தன்மை.
- சூழலுக்கு ஏற்படும் தாக்கம்.
- கிரயம்.

agaram.lk

(4X½=02புள்ளிகள்)

5) அ) ஒரு உற்பத்திப் பொருள் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் இருந்து, அது சந்தையைவிட்டு வெளியேறும் வரைக்குமான பல்வேறு கட்டடங்களை அடக்கிய காலம் உற்பத்திப்பொருள் வாழ்க்கை வட்டம் எனப்படும்.

(02 புள்ளிகள்)

ஆ)

- அபிவிருத்திக் கட்டம்.
- அறிமுகக் கட்டம்.
- வளர்ச்சிக் கட்டம்.
- முதிர்ச்சிக் கட்டம்.
- வீழ்ச்சிக் கட்டம்.

(01 புள்ளி)

- சந்தையினைப் புதுப்பித்தல்.
- உற்பத்திக் கலவையில் மாற்றங்களைச் செய்தல்.
- விலைகளைத்திடீர் குறைப்புச் செய்தல்.
- மேம்படுத்தல் முறைமைகளினை மாற்றி அமைத்தல்.
- விநியோக முறைகளை மாற்றி அமைத்தல்.

(01 புள்ளி)

08)

1) அ)

- உரிமையாளரின் செல்வத்தை உச்சப்படுத்தலும் வணிகத்தின் பெறுமதியை அதிகரித்தலும்.
- இலாபத்தை உச்சப்படுத்தல்.
- பங்கொன்றிற்கான உழைப்பினை உச்சப்படுத்துதல்.
- நிதி வளங்களைத் திட்டமிடுதல்.
- நிதி வளங்களைக் கட்டுப்படுத்தல்.
- திரவத்தன்மைப் பிரச்சினைகளை இழிவுபடுத்துதல்.
- நிதி மோசடிகளையும் தவறான நிதிப்பாவனையையும் குறைத்தல்.
- முதலீட்டு, நிதி தீர்மானங்களை மேற்கொள்ளல்.

(4X½=02புள்ளிகள்)

ஆ) முதலீட்டுத் தீர்மானங்கள்

நடைமுறை அல்லாச் சொத்துக்கள், நடைமுறைச் சொத்துக்கள் என்பன மீது நிதியினை ஈடுபடுத்துவது தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்கள்.

(01 புள்ளி)

நிதியிடல் தீர்மானங்கள்

நிதியினைப் பெற்றுக்கொள்ளும் மூலங்கள் தொடர்பிலான தீர்மானங்கள்.

(01 புள்ளி)

2)

- தற்போதைய மூலதன இணைப்பு.
- நிதி திரட்டுவதற்கான கிரயம்.
- நிறுவன இலாபத்தன்மை.
- முகாமையில் வாக்குரிமையில் ஏற்படும் தாக்கம்.
- மீளச் செலுத்தும் தன்மை.
- சொத்தில் ஏற்படும் தாக்கம்.
- வழங்கல் செலவு.

குறிப்பிட 4X½=02புள்ளிகள்
விளக்க 4X½=02புள்ளிகள்

agaram.lk

3) அ) கிரயம் (வட்டி)

- நிபந்தனைகள்.
- நிறுவனத்தின் தன்மை.
- பாதுகாப்பு.
- கடன் பெறக்கூடிய கால அளவு.
- கடன் தொகையின் அளவு.
- நிறுவனத்தால் வழங்கப்படும் ஏனைய சேவைகள்.
- பின்பற்ற வேண்டிய நடை முறைகள்.
- வங்கிக்கும், வணிகங்களுக்குமிடையிலான தொடர்பு.

(4X½=02புள்ளிகள்)

**ஆ) அனுகூலம்**

- பெறவேண்டிய பணத்தை விரைவாக பெற முடிதல்.
- செலவுகளைத் தாமதப்படுத்தல்.
- இருப்பினைக் குறைப்பதன் மூலம் நிதியை பெற்றுக்கொள்ளல்.

(2X½=01புள்ளி)

**பிரதிகூலம்**

- வாடிக்கையாளரை இழக்க நேரிடல்.
- பொறுப்புக்களைக் கொடுத்துத் தீர்க்காமையால் நன்மதிப்புப் பாதிக்கப்படல்.

(2X½=01புள்ளி)

4) அ)

- ஏனைய வளத்துடன் ஒப்பிடுமிடத்து உயிர் உள்ளதும் உணர்வுள்ளதுமான வளம்.
- சிந்திக்கவும், துலங்கவும் உள்ள ஆற்றல்.
- காலம் செல்லச் செல்ல பயிற்சி, அனுபவங்களினால் பெறுமதி அதிகரித்துச் செல்லும் வளம்.
- ஒன்றுபட / ஒழுங்குபடுத்த உள்ள ஆற்றல்.
- கிரயம் / சம்பளத்தின் மீது கரிசனை செலுத்தக்கூடியது.
- நேரத்தின் பெறுமதி தெரிந்த வளம்.
- எதிர்வு கூற முடியாத வளம்.
- சிக்கலான நடத்தைக் கோலங்களை உடையது.
- புத்துருவாக்கத் திறன் உடையது.
- ஏனைய அனைத்து வளங்களையும் கட்டுப்படுத்தித் தீர்மானங்கள் எடுக்கக் கூடியது.

(4X½=02புள்ளிகள்)

ஆ) தொழில் விபரணம் செய்தல் என்பதோ தொழில் ஒன்று கொண்டிருக்க வேண்டிய சிறப்பியல்புகளைக் கருதுவதாகும். இதன் கீழ் யாதேனும் வேலை ஒன்றிற்குரிய பணிகள், கடமைகள், பொறுப்புக்கள், வேலை நிபந்தனைகள் என்பவற்றை விபரித்துக் காட்டுவதுண்டு.

(01 புள்ளி)

வேலைக் குறித்துரைத்தல் என்பதோ வேலையொன்றினை நிறைவேற்றுவதற்காக அமர்த்தப்பட இருக்கும் நபர்களிடம் காணப்பட வேண்டிய தகமைகளை (அறிவு, திறன், அனுபவம்) விளக்குதே ஆகும்.

(01 புள்ளி)

agaram.lk

5) அ)

- எதிர்கால ஊழியத் தேவைகளை தீர்மானிக்க முடிதல்.
- மனித வளத்தினை மிகவும் வினைத்திறனாகவும், விளைத்திறனாகவும் பயன்படுத்த முடிதல்.
- ஊழியர்களது கிரயத்தைக் குறைக்க முடிதல்.
- ஊழியர்களது விருத்தியினை மேம்படுத்த முடிதல்.
- உபாய முறையிலான திட்டமிடலை உருவாக்குதலும், செயற்படுத்தலும்.
- நிறுவனச் செயற்பாட்டை தடையின்றி மேற்கொள்வதனால் முகாமைக்கும் ஊழியருக்கும் இடையில் நல்லுறவினை நிலைநாட்ட முடிதல்.
- மிகை ஊழியர், பற்றாக்குறை ஊழியர் போன்ற பிரச்சினைகள் ஏற்படமாட்டாது.

(4X½=02புள்ளிகள்)

ஆ)

- குறித்த பொருட்கள், சேவைகள் தொடர்பான சந்தைக் கேள்வி.
- நிறுவனத்தின் குறிக்கோள் / நோக்கம்.
- நிறுவன உற்பத்தி முறை.
- எதிர்காலத்தில் ஊழியர் ஓய்வு பெறுதல் தொடர்பான விடயங்கள்.
- ஊழியர் புரள்வு / தாமாக விலகும் ஊழியர் எண்ணிக்கை.
- பதவி உயர்வு பெறும் ஊழியர்களின் எண்ணிக்கை.
- எதிர்காலச் செயற்றிட்டங்கள்.
- நிறுவன நிதிநிலமை.
- ஊழியர்சேவையினை முடிவுறுத்தல் / ஒப்பந்த நிறைவு.

(4X½=02புள்ளிகள்)